# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு இணைக்கப்பட்ட கண்டி தேசிய தாதியர் கல்லூரியில் பயிற்சிக்காக தாதியர் மாணவர்களின் ஆட்சேர்ப்பு

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் நிரந்தர பதவியணிக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு இணைக்கப்பட்ட கண்டி தேசிய தாதியர் கல்லூரியில் பயிற்சிக்காக தாதியர் மாணவர்களின் ஆட்சேர்ப்புக்கு பின்வரும் தேவைகளின் கீழ் தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**A) கல்வித் தகைமைகள்:**

I. க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சை தவிர்த்து) உயிரியல் விஞ்ஞானம்/ பௌதிக விஞ்ஞானம் (கணிதத் துறை) அல்லது விவசாயத் துறையில் குறைந்தது மூன்று (03) சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.

II. க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 04 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(மேல் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகள் மற்றும் சராசரி ''இஸட்'' புள்ளிகளை விண்ணப்பத்திற்கு இணைத்தல் வேண்டும்.)

**B) பயிற்சிக்கு தொடர்புடைய வயது வரம்பு மற்றும் நிபந்தனைகள்:**

1. 2026.01.18 இல் 18 வயதுக்கு குறையாதவராகவும் 25 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2. உயரம் 5' இற்கு குறையாதிருத்தல் வேண்டும்.
3. திருமணம் புரியாதவராக இருத்தல் வேண்டும்.
4. உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
5. பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வரை திருமணம் புரியாமல் இருப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
6. ஆண் அபேட்சகர்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

**C) கொடுப்பனவு**

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் கந்தான தேசிய தாதியர் கல்லூரியில் மூன்று (03) ஆண்டுகள் பயிற்சி பெறுதல் வேண்டும் என்பதோடு பயிற்சிக் காலத்தில் பின்வரும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

முதல் ஆண்டு - மாதம் ஒன்றுக்கு ரூபா 41,317/-

இரண்டாம் ஆண்டு - மாதம் ஒன்றுக்கு ரூபா 43,730/-

மூன்றாம் ஆண்டு - மாதம் ஒன்றுக்கு ரூபா 46,310/-

மேலுள்ள கொடுப்பனவுக்கு மேலதிகமாக, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**D) பொதுவான நிபந்தனைகள்:**

1. தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக் காலத்தில் கொழும்பு அல்லது கந்தான தேசிய தாதியர் கல்லூரியின் விதிகள் மற்றும் ஒழுங்குகளை பின்பற்றுதல் வேண்டும்.
2. மூன்று ஆண்டு பயிற்சி நிகழ்ச்சியை வெற்றிகமாக பூர்த்தி செய்வதன் அடிப்படையில் தரம் A இன் நிரந்தர தாதி அதிகாரியாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் நியமனம் வழங்கப்படும். தாதி அதிகாரியாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் நியமனம் பெற்றவர்கள் மற்ற வைத்தியசாலைகளுக்கு பணி மாற்றம் பெற அனுமதிக்கப்படமாட்டார்கள்.
3. தேர்வுசெய்யப்பட்ட அபேட்சகர்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
4. மூன்று ஆண்டு பயிற்சி கற்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையுடன் தேர்வு செய்யப்படும் அபேட்சகர்கள் உடன்படிக்கை ஒன்று மற்றும் பிணை ஒன்றுக்கு வருதல் வேண்டும் என்பதோடு குறைந்தது பத்து ஆண்டு காலத்திற்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் பணியாற்றுதல் வேண்டும்.
5. தேர்வு செய்யப்பட்ட அபேட்சர்கள் பயிற்சி ஆரம்பிப்பதற்கு முன்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபைக்கு மேலுள்ள ஒப்பந்தம் மற்றும் பிணையை கையளித்தல் வேண்டும்.
6. பயிற்சி பெறும் ஒருவராக மேலுள்ள உடன்படிக்கையை மீறும் எந்த ஒரு அபேட்சகரும் ரூபா முந்நூறு ஆயிரம் (ரூபா 300,000/-) உத்தரவாத பெறுமதி மற்றும் பயிற்சி தொடர்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வகித்த மற்ற செலவுகளை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.
7. பயிற்சிக் காலத்தின்போது ஏதேனும் ஒழுக்காற்று செயற்பாடு அல்லது மோசமான உடல் மற்றும் உள தகைமைகள் தொடர்பில் கண்டறியப்பட்டால் பயிற்சியில் இருந்து இடைநிறுத்தப்படும்.
8. தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை அல்லது தவறான தகவல் சமர்ப்பிக்கப்பட்டது கண்டறியப்பட்டால் பயிற்சியில் இருந்து இடைநிறுத்தப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

இல. Aஇல் உள்ள தகைமைகளை பூர்த்தி செய்த அபேட்சகர்கள் இல. Dஇல் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்கினால் மாத்திரம் பயிற்சிக்காக விண்ணப்பிக்க முடியும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''தாதி மாணவருக்கான விண்ணப்பம்'' என்று குறிப்பிடுதல் வேண்டும். அனைத்து விண்ணப்பங்களும் 2026.02.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும்.

**பணிப்பாளர்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**
**தலபத்பிட்டிய**
**நுகேகொடை.**